# மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலம்; வெற்றித் திருவிழாக் காலம்!

தமிழ்முகத்தில்
வெற்றிமலர் புன்னகைக்கிறது
தமிழ்மனத்தில்
ஆயிரம் விளக்குகள் ஏற்றி வைக்க
வானம்
நட்சத்திரங்களை அழைத்து வருகிறது
கடல்களின்
அலைகளில் வாகைப்
பரணிப் பாடல்கள் முழங்குகின்றன.

தமிழ்நாட்டுச்
சட்டப்பேரவைக்கு எதிராகச்.
சாட்டை தூக்கியவன்
உச்ச நீதிமன்றத்தால் தூக்கி எறியப்பட்ட
வரலாற்றை
வைகறை
கண்ணிமைக்காமல்
படிக்கிறது
அந்தி
ஸ்டாலினுக்கு அணிவிக்க
செவ்வாடை ஏந்தி வருகிறது.

மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலம்
திக்குகள் இதயத்தில் வெற்றிக்
கல்வெட்டுகள்
செதுக்கும்
திருவிழாக் காலம் !

மக்களாட்சியின்
மாபெரும் வெற்றிக்குப்
பச்சைக் கொடி அசைத்து
உச்சநீதிமன்றம் இசைவு தந்துள்ளது
மக்கள் அரசுக்கு
மரியாதை முரசுகொட்டியுள்ளது.

தாமதிக்காமல்
கிடப்பில் ஆளுநர் போட்டிருந்த
தமிழகச் சட்டப்பேரவையின்



சட்டமுன்வரைவுகளை
உச்சநீதிமன்ற மே சட்டென்று
சட்டமாக்கி உள்ளது.
தள்ளிப் போகும் நீதி
தவிர்க்கப்பட்ட நீதியென அறிவதல்லவா
நீதித் தராசின் அடையாளம்!

தமிழகச் சட்டப் பேரவையின்
உச்சி குளிர மலர்கள் தூவிய
உச்சநீதிமன்றம்
முட்டுக் கட்டை மண்டைமேல்
என்ன கொட்டியதோ
யாரே அறிவார்!



**கவிப்பேரருவி**
**ஈரோடு தமிழன்பன்**



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகராட்சி, 8 வது வார்டு 15வது வார்டியில் 30 லட்சம் மதிப்பீட்டு புதிய ரேஷன் கடை திறப்பு விழா மற்றும் 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார். உடன் நகர்மன்றத் தலைவர் என்.இ.கேமூர்த்தி, ஆணையர் தட்சிணாமூர்த்தி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், எஸ்.சங்கர், சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, ஏ.ஜெ.பவுல், கே.சுரேஷ்குமார் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் வார்டு கழகச் செயலாளர்கள் கவுன்சிலர்கள் பலர் உள்ளனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 52வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 52 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (12.4.2025) அம்பத்தூர் வடக்கு பகுதி: இடம்: 1) வட்டம் 79 எ.கே நகர். கோவில் தெரு ,எ. கே நகர் ஓரகடம் அம்பத்தூர் .2) காந்தி நகர் சுகாதார நிலையம் அருகில், காந்தி நெடுஞ் சாலை, காந்தி நகர் அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டிஎஸ்பி ராஜ கோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் வடக்கு/தெற்கு/ கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# கோயில்களுக்குத் தரப்படும் ஒருகால பூஜை திட்ட நிதியை உயர்த்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - இனிகோ இருதயராஜ் கோரிக்கை!

சென்னை, ஏப்.13-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எஸ். இனிகோ இருதயராஜ்:** திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் அருள்பாலிக்கும் காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கும், திருச்சி மேலபுலிவார் ரோடு சுந்தரதாஸ் பகுதியில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கும் எங்களுடைய கோரிக்கையை ஏற்று குடமுழுக்கு பணிகளுக்கு உத்தரவிட்டு இன்றைக்கு பணிகள் நடைபெற்று வருவ தற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி, ஒரு கால பூஜை திட்டத்தில் இருக்கிற கோயில்களுக்கான தரப்படுகின்ற நிதி போதுமானது அளவில் இல்லை அந்த நிதி உயர்த்தி தரப்படுமா?



**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** எல்லோருக்கும் எல்லாம் என்ற அரசுக்கு உதாரணமாக கிருத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர் இந்து திருக்கோயிலுக்கு நிதியை உயர்த்தித் தருவாரா என்று கேட்டிருக்கின்றார். தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஒரு கால பூஜை திட்டத்தில் இருக்கின்ற திருக்கோயில்களின் மீது அவரது கவனம் திரும்பியதால் அத்திருக்கோயில்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று இருந்த வைப்பு நிதியை இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார். அதோடு மட்டுமல்லாமல் அந்த இரண்டு லட்சம் ரூபாயும் போதாது என்ற காரணத்தினால் தற்போது 2.50 லட்சம் ரூபாயாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் வைப்பு நிதியை உயர்த்தி தந்திருக்கின்றார்.

அதோடு மட்டுமல்லாமல் 12,959 திருக்கோயில்கள் என்று இருந்து அந்த கோயில்களின் எண்ணிக்கையை 18,000 திருக்கோயி ல்களாக உயர்த்தியிருக்கின்றார். இந்த வகையில் எந்த ஆட்சியிலும் செய்யாத அளவிற்கு அரசினுடைய மானியமாக 310 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கிய பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும். மேலும், அந்தத் திருக்கோயி லில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்களுக்கும் பணியாளர்களுக்கும் எந்த விதமான பணி பாதுகாப்பும் இல்லை, எந்த விதமான ஊதியமும் இல்லை என்பதை அறிந்து முதல்வர் அவர்கள் அனைவரையும் வங்கி கணக்கை தொடங்கச் செய்து மாதம் ஆயிரம் ரூபாயை 18 ஆயிரம் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கும் வழங்குகின்ற ஒரு உன்னத திட்டத்தை ஏற்படுத்தியவர்.

அதோடு நின்றாரா என்றால் அதோடு நிற்கவில்லை. அந்த திருக்கோயிலிலே பணி புரிகின்ற அர்ச்சகர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பயில 2023 ஆம் ஆண்டு 400 மாணாக்கர்களுக்கும், 2024 ஆம் ஆண்டு 500 மாணாக்கர்களுக்கும் கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000 பத்தாயிரம் மற்றும் கல்வி உபகரணங்களையும் வழங்கினார். இந்த ஆண்டு சுமார் 600 மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்படி அனைத்து வசதிகளையும் செய்து தந்து பாராமுகமாக இருந்த ஒருகால பூஜைத்திட்டத்திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தான் அந்த ஒரு கால பூஜை திட்டத்தில் செயல்படுகின்ற அனைத்து திருக்கோயில்களிலும் இன்றைக்கு ஆண்டவன் மகிழ்ச்சியோடு இருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஊரக, பேரூராட்சி, நகரப் பகுதிகளில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும்

# அங்கன்வாடி மையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கீதாஜீவன் தகவல்!

சென்னை, ஏப்.13-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**அ.பண்ணாரி:** பவானிசாகர் தொகுதியிலுள்ள சத்தியமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட இக்கரைநெகமம் ஊராட்சியில் மூலக்கடை என்னும் கிராமம் உள்ளது. இந்த ஊரிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொளிஞ்சானூரில்தான் குழந்தைகள் மையம் உள்ளது. ஆகவே, மூலக்கடையில் புதிதாக குழந்தைகள் மையம் அமைத்தும், மாக்கினாங்கோம்பை ஊராட்சியிலுள்ள மங்கலப்புரத்திலும், சத்தியமங்கலம் நகராட்சியிலுள்ள தண்டு மாரியம்மன் கோயில் அன்னை வீதியிலும், பவானிசாகர் ஒன்றியத்திற்குட்பட்ட பாச்சாமலனூர், தச்சுபெருமாள் வளையம், பொங்கம்பள்ளி, ஆலாம்பாளையம், நல்லூர் நேரு நகர் ஐயப்பன்கோயில் வீதி, புங்கார் போன்ற பகுதிகளில் அங்கன்வாடி குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகின்றது. மேற்கண்ட ஒவ்வொரு மையத்திலும் 20 குழந்தைகளுக்கும் அதிகமாக உள்ளனர். இந்த மையங்கள் தனியார் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. தனியார் கட்டடத்தில் குழந்தைகளுக்கு போதுமான இட வசதி வாய்ப்புகள் இல்லை. ஆகவே, குழந்தைகளின்மீது அக்கறை கொண்டு மேற்கண்ட அங்கன்வாடி குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?



**அமைச்சர் பி.கீதா ஜீவன்:** நம்முடைய சத்தியமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டடத்தில் உள்ள மையங்களின் பட்டியல்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ணாரி அவர்கள் இங்கு பட்டியலிட்டார்கள். சத்தியமங்கலம் வட்டாரத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் 41 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மையங்களுக்கெல்லாம் முன்னுரிமை அளித்து ஊரகப் பகுதியாக இருந்தாலும், பேரூராட்சி நகரப் பகுதியாக இருந்தாலும் கட்டித் தரப்படும்.

**அ.பண்ணாரி:** பவானிசாகர் ஒன்றியத்திற்குட்பட்ட தேசியம்பள்ளி ஊராட்சி, புங்கம்பள்ளி கிராமத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்ட அலுவலகத்தின் கட்டடமானது மிகவும் பழமையான கட்டடம் ஆகும். தாய்சேய், குழந்தைகள் அதிகம்பேர் வந்து செல்லுகின்ற இடமாக இந்த அலுவலகம் உள்ளதால் கருணையோடு பரிசீலனை செய்து, புதிதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கீதா ஜீவன்:** பவானிசாகர் வட்டாரத்திற்கு குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். நம்முடைய துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, இதுவரைக்கும் கட்டடம் கட்டித் தரப்படவில்லை. மழைக்காலங்களில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினர் கூறுவதற்கேற்ப, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகவோ, பிற துறைகளின் மூலமாகவோ கட்டடம் கட்டுவதற்கு அல்லது மாற்று கட்டடத்தில் அதனை மாற்றியமைப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### கோமுகி அணையில் உள்ள பூங்காவைப் புதுப்பித்திட வேண்டும்!

# சிறுகளூர் - கவியம் நீர் வீழ்ச்சிகளை சுற்றுலாத் தலமாக அறிவித்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - தா.உதயசூரியன் கோரிக்கை!

சென்னை, ஏப். 13 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**தா.உதயசூரியன்:** சேலம் மாவட்டம், சின்னக் கல்வராயன் மலையிலிருந்து ஏழு ஆறுகள் உருவெடுத்து வருகின்றன. அதன் மூலமாக மேகம் நீர்வீழ்ச்சி, அதற்கு அய்யா தந்தை பெரியார் அவர்களின் பெயர் வைக்கப் பட்டிருக்கிறது.

சிறுகளூர் நீர்வீழ்ச்சி இருக்கிறது; கவியம் நீர்வீழ்ச்சி இருக்கிறது.

ஆகவே, இதில் ஏதாவது ஒன்றை சுற்றுலாத் தலமாக உருவாக்குகின்றபோது, பாண்டிச்சேரி, விழுப்புரம், கடலூர் போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் அங்கு வருகிறார்கள். பாதுகாப்பு காரணத்தால் அந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவித்தால், அப்பகுதியில் சுற்றுலாத் தலம் ஏற்பட நல்ல வாய்ப்பாக இருக்கும்.

மக்கள் பொழுதுபோக்க நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கனந்தல், கோமுகி அணைக்கு அமைச்சர் அவர்கள் வருகைத் தருவதாகச் சொன்னார்கள். நேரம் இல்லாத காரணத்தால் வர இயலவில்லை. அங்குள்ள பூங்காவை அமைச்சர் புதுப்பித்து தருவாரா?



**அமைச்சர் இரா.இராஜேந்திரன்:** கல்வராயன் மலையில், பெரியார் நீர்வீழ்ச்சி, மேலும், அங்கு இரண்டு, மூன்று நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

ஆண்டு முழுவதும் நீர் வீழ்ச்சி யில் தண்ணீர் வர இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, சுற்றுலாத் துறை அலுவலர்கள்மூலம் ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். நம்முடைய உறுப்பினர் அவர்கள், கோமுகி அணைப் பகுதியில் பூங்கா அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதை வலியுறுத்தி இருக்கிறார்கள். அது நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



சென்னை மாநகராட்சி வார்டு 151,பூத்தப்பேடு 2 இடங்களில் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏமாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம். வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில் கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க இளநீர்,பழரசம், வெள்ளரி பிஞ்சு, நுங்கு, தர்பூசணி பழம் மற்றும் கிர்னி பழம் ஆகியவற்றை வழங்கி தண்ணீர் பந்தலினை திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர்கணேஷ் எம். சி.செய்திருந்தார்.



கழகத்தலைவரின் தத்துவ கரங்களை வலுப்படுத்த இளந்தலைவரின் வழியில் ”இல்லம் தோறும் மாணவர் அணி” முன்னெடுப்பில் கோவை தெற்கு மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி பாகம் எண் 40ல் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது நிகழ்வை கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் துவங்கி வைத்தனர்.உடன் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தம்பி வி.ஜி.கோகுல்,சூலூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மன்னவன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தம்பி பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.